திருவள்ளுவர் ஆண்டு 2037

# செந்தமிழ்

திங்கள் இதழ்

தொகுதி : 100 பகுதி : 08 ஆகஸ்ட்–06

மதுரைத் தமிழ்ச்சங்க வெளியீடு

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை–1.

ஆகஸ்ட்–06

## தமிழ்ச் சங்க ஆட்சிக் குழு

| | |
|---|---|
| முகவை மன்னர் திரு. நா.குமரன் சேதுபதி | தலைவர் |
| திருமதி. இராணி இலட்சுமி நாச்சியார் | துணைத்தலைவர் |
| திரு. இரா. அழகுமலை எம்.ஏ., எம்.ஃபில்., | செயலாளர் |
| திரு. மா. சங்கரபாண்டியன் பி.ஏ., பி.எல்., | உறுப்பினர் |
| திரு. டாக்டர் ந.சேதுராமன் M.S., M.Ch., M.N.M.S. (Uro) F.I.C.S., | உறுப்பினர் |
| திரு. ச.பரங்குன்றம் பி.ஏ., | உறுப்பினர் |
| திரு. இரா.குருசாமி பி.ஏ., | உறுப்பினர் |
| திரு. க.முத்தையா பசும்பொன் பி.ஏ., பி.எல்., | உறுப்பினர் |
| திரு. இரா.கண்ணன் | உறுப்பினர் |
| திரு. மா.ச. கார்த்திகேய பாலாஜி பி.இ., | உறுப்பினர் |
| திரு. எஸ்.எம்.நாகராசன் பி.ஏ., | உறுப்பினர் |
| திரு. பி.வீரணன் | உறுப்பினர் |

## கல்லூரிக் குழு

| | |
|---|---|
| டாக்டர் திரு.ந.சேதுராமன், M.S.,M.Ch.(URO).,M.N.M.S.(URO).,FICS., | தலைவர் |
| திரு. மா. சங்கரபாண்டியன், பி.ஏ.பி.எல்., | செயலாளர் |
| திரு. இரா. அழகுமலை, எம்.ஏ., எம்.ஃபில்., | உறுப்பினர் |
| திருமதி. இராணி இலட்சுமி நாச்சியார் | உறுப்பினர் |
| திரு. ச.பரங்குன்றம், பி.ஏ., | உறுப்பினர் |
| திரு. இரா.குருசாமி, பி.ஏ., | உறுப்பினர் |
| திரு. மா.ச.கார்த்திகேய பாலாஜி, பி.இ., | உறுப்பினர் |
| திரு. க.முத்தையா பசும்பொன் பி.ஏ., பி.எல்., | உறுப்பினர் |
| திருமதி. வாசுகி ராஜா எம்.எஸ்.சி., எம்.ஃபில்., | உறுப்பினர் |
| இராஜா. திரு. முருகதாஸ் தீர்த்தபதி | உறுப்பினர் |
| திரு. இரா.கண்ணன் | உறுப்பினர் |
| திரு. மா.ச.மாரியப்ப முரளி பி.ஏ., பி.எல்., | உறுப்பினர் |
| டாக்டர் திரு. க சின்னப்பா பி.எச்.டி., முதல்வர் | உறுப்பினர் |
| டாக்டர் திருமதி. வீ.காந்திமதி பி.எச்.டி., இணைப்பேராசிரியை | உறுப்பினர் |
| டாக்டர் திருமதி. செ.தனலெட்சுமி பி.எச்டி., இணைப்பேராசிரியை பல்கலைக்கழக உறுப்பினர் | உறுப்பினர் |

# செந்தமிழ்

(தோற்றம் 1903)

தொகுதி : 100
பகுதி : 08
ஆகஸ்ட் 2006

திங்கள் இதழ்
திருவள்ளுவர் ஆண்டு 2037




வள்ளல் பாண்டித்துரைத்தேவர்
21.03.1867 - 02.12.1911

மதுரைத் தமிழ்ச்சங்கம் 14-09-1901 THE MADURAI TAMIL SANGAM

| இதழ்க் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் | ரூ. 60 | ரூ. 600 |
| புரவலர் கட்டணம் | ரூ. 1000 | ரூ. 2000 |
| தனி இதழ்க் கட்டணம் | ரூ. 6 | ரூ. |


ஆசிரியர் **இரா. அழகுமலை** எம்.ஏ., எம்.ஃபில்.,
செயலாளர் – மதுரைத் தமிழ்ச்சங்கம்.

பதிப்பாசிரியர் **இரா. சதாசிவம்** எம்.ஏ., எம்.ஃபில்.,
மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை–1.

# பொருளடக்கம்

இதழ்மணம் 669

நூல் மதிப்புரை — இரா. சதாசிவம் 671

தமிழ் அறஇலக்கியத்தின் இனிமையும் நீர்மையும் 673
தமிழண்ணல்

நோற்றலின் ஆற்றல் 679
பேராசிரியர் கதிர் மகாதேவன்

சிலப்பதிகாரம்-காட்டும் கண்ணன் 682
பேராசிரியர் முனைவர் அமுதன்

உதயணன் வரலாறு
பேராசிரியர் முனைவர் சுப. அண்ணாமலை 690

முன்னுதித்த நங்கையா? 696
ஆதி. பாலசுந்தரன்

மாலவன் பற்றிய தேசியக் கருத்தரங்கம் 705

# இதழ்மணம்

பேராசிரியர் சுப. அண்ணாமலை அவர்களுக்கு அக்டோபர் திங்கள் பத்தாம் நாள் எழுபத்தேழு அகவை நிறைவுறுகின்றது. அப்பெருமகனார் தமிழுக்கு ஆற்றிய பணிகள் அளப்பரியதாகும். சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் பெரும் பேராசிரியர்களிடம் பயின்று பின்பு மதுரை தியாகராசர் கல்லூரியில் பணியைத் தொடங்கினார்கள். தமிழ்த் துறைத் தலைவராகவும் கல்லூரி முதல்வராகவும் பணியாற்றிப் பெரும் பணி செய்துள்ளார்கள்.

திருமந்திரம், திருவிளையாடற் புராணம், கலித்தொகை முதலான நூல்களை செப்பமுற அருஞ்சொற்பொருள் விளக்கத்துடனும் பதிப்பித்துள்ளார்கள். திருவருட்பா, திருவாசகம், பெரியபுராணம் குறித்து அவர்கள் செந்தமிழில் தொடர் கட்டுரை வரைந்து தமிழ் மக்கள் இதயம் நிறைந்து விளங்குகிறார்கள். அப்பெரியார் நீண்ட ஆயுளும் திடகாத்திரமான உடல் நலமும் பெற்று வாழ இறைவனை வாழ்த்துவோம்.

அவர்கள் இவ்விதழில் உதயணன் வரலாறு எழுதுகிறார்கள். செய்யுளை புரிந்து கொள்வதற்கு எளிதாக உரைநடையில் உவேசா எழுதும் வழக்கம் அனைவரும் அறிந்ததே. அதுபோல உதயணன் வரலாற்றை ஆசிரியர் சுப. அண்ணாமலை அவர்கள் செந்தமிழ் வாசகர்களுக்கு தருகிறார்கள்.

அடுத்துப் பேராசிரியர் கதிர் மகாதேவன் அவர்கள் நோற்றலின் ஆற்றல் என்னும் தலைப்பில் தவத்தின் வலிமையை விளக்குகிறார். தவம் துறவிக்கு மட்டுமல்ல; இல்லறத்தானும் நுட்பம் உணர்ந்து தவவலிமையைப் பெறுதல் வேண்டும் என்பதை அறிவுறுத்தும் திறம் ஓர்தற்பாலதாகும்.

பேராசிரியர் முனைவர் அமுதன் அவர்கள் மதிப்புறு பேராசிரியராக பொள்ளாச்சி நாச்சிமுத்துக் கவுண்டர் கல்லூரியில் பணிபுரிந்து வருகிறார்கள். அப்பேரறிஞர் மதுரைத் தமிழ்ச்சங்கம் செந்தமிழ்க் கல்லூரியில் நடைபெற்ற மாலவன் கருத்தரங்கில் சிலப்பதிகாரம் குறித்து அரிய உரை நிகழ்த்தினார்கள். அவ்வுரை கட்டுரை வடிவில் செந்தமிழில் வருவது மகிழ்ச்சி தருவதாகும்.

## செந்தமிழ்ப் புரவலர்

தேனி நாடார் சரஸ்வதி கலை அறிவியல் கல்லூரி முதல்வர் பேராசிரியர் கிரிசா இராசாராம் இத்திங்களில் செந்தமிழ்ப் புரவலராகிறார். செந்தமிழ் இதழுக்கு ரூபாய் ஆயிரம் வழங்கியுள்ளார். பேராசிரியர் இராசாராம் அவர்கள் காரைக்குடி அழகப்பா கல்லூரியிலிருந்து ஓய்வுபெற்றபோது செந்தமிழ் இதழுக்கு ரூ. ஆயிரம் வழங்கினார் என்பது ஈண்டு நினைவு கூறத்தக்கது. இருவரும் கல்வி சார்ந்த முயற்சியும் அத்தகைய முயற்சியைப் போற்றுதலும் தவிர வேறு பயன் கருதா இயல்பினர் என்பதை கல்வியாளர்கள் சிந்தனைக்குக் கொண்டுவர விரும்புகின்றேன். தம்பதியர் இருவருக்கும் அவருடைய வழித்தோன்றல்களுக்கும் செந்தமிழ் தன் வாழ்த்தைத் தெரிவிக்கிறது.

# நூல் மதிப்புரை

இரா. சதாசிவம்

நூல்: **"விரல்கள் பத்தும் மூலதனம்"**

விலை ரூ.80. பக்கங்கள் 265

ஆசிரியர்: பேராசிரியர் இரா. மோகன்.

பேராசிரியர் மோகனின் 'விரல்கள் பத்தும் மூலதனம்' என்னும் நூல் பேராசிரியர் அண்மையில் எழுதிய கட்டுரைத் தொகுப்பு ஆகும். பேராசிரியரின் ஆழ்ந்து அகன்ற கல்விப் பார்வை இந்நூலில் சிறக்கிறது; அவர்கள் சமுதாயத்தைக் கூர்ந்து பார்க்கிறார்கள்; ஒவ்வொரு அசைவையும் கவனத்தில் கொள்கிறார்கள்; அதுவே அவருக்குப் பாட சாலையாகிறது. அரசியல், திரைக்காட்சி, இலக்கியம், பட்டிமன்றம் சமகாலத்து அறிஞர்கள், மாணவர்கள் என்று பல்வேறு களங்களின் நிகழ்வுகளிலிருந்து புதிய உண்மைகளை சிந்தித்து வெளிக்கொணர்வது பாராட்டுக்குரியதாகும். அன்றாட வாழ்க்கையில் மக்களுக்குத் தேவையான இனிய செய்திகளைப் படிப்பவர்களுக்கு படித்து முடிக்கத் தூண்டும் சொல்லின்பமும், கருத்தின்பமும் செரிந்த நடையில் பேராசிரியர் நூல் முழுவதும் சிறு சிறு தலைப்பில் அமைத்திருப்பது அவரது புலமைச் சிறப்பாகும்.

தமிழன் விழித்திருக்க வேண்டும். எழுச்சி பெற வேண்டும் என்னும் நோக்கம் நூல் முழுவதும் இழையோடி உள்ளது. விழிப்போடு அறிவைத் தேடுவதை உள்ளீடாக வைத்துக் கட்டுரைப் புனைந்துள்ளார்; அறியாமையும் உணர்ச்சியுமே வாழ்க்கையாக சிந்தனை வளம் இல்லாத பெரும்பான்மையான நேரங்களில் சிந்திப்பதற்கும் விழிப்போடு கற்க வேண்டிய செய்திகளை நினைவுறுத்துவதற்கும் இந்நூல்

பயன்படும். "இயல்பாக இருங்கள் சிக்கல் இருப்பதாக நீங்களே கற்பனை செய்துகொண்டு கவலைப்படாதீர்கள்" பக்கம் 46 "நாம் யாவரும் பணியாளர்களே" என்னும் அடிப்படை வாழ்வியல் உண்மையை உணர்ந்து ஒருவருக்கு ஒருவர் உதவியாக வாழ்ந்து காட்டுவோம். பக்கம் 79 "பெற்றோரின் நெருக்கடியில் சிக்கித்தவிக்கும் குழந்தைக்குப் பாரதியின் பாப்பாப்பாட்டு," பக் 82 "மனிதன் இருக்கிறான்; மனிதனுக்குரிய தயவு, இரக்கம் அன்பு நேயம் போன்ற முகவரி இல்லை" என்பதை அவர்கள் நூலில் சுட்டிக் காட்டியிருப்பது போன்ற அரிய செய்திகள் கற்பவரை விழிப்படையச் செய்கிறது. நூல் முழுவதும் இது போன்ற அரிய செய்திகள் உள்ளன. பக்கம் 51ல் "பள்ளியிலோ, கல்லூரியிலோ படிக்கும் மாணவன் அல்லது மாணவி தேர்வில் தோல்வி காரணமாகத் தற்கொலை செய்துகொள்கிறான் செய்துகொள்கிறாள்" என ஒரு தொடர் வந்துள்ளது. தமிழ் இலக்கண மரபிற்கு ஒவ்வாத நடையாக அமைந்துள்ளது. புதிய உத்தியாக இதனை எடுத்துக்கொள்ள வேண்டுமா?

# தமிழ் அற இலக்கியத்தின் இனிமையும் நீர்மையும்

தமிழண்ணல்

தமிழ் அறநூல்கள் இனிமை மிக்கன; தனித் தன்மை உடையன. அவற்றின் வரலாறு அறிந்தால் போதாது. அவற்றின் உள் நுழைந்து பயிலவேண்டும்.

கலித்தொகை ஓர் அகத்திணைநூல். நெய்தற்கலியில் நல்லந்துவனார் ஒரு பாடல் புனைந்துள்ளார். தலைவன் தலைவியைத் திருமணம் செய்துகொள்ள வேண்டும். அவன் தயங்குவதறிந்த தோழி அவனுக்கு 'அறவுரை' கூறுகிறாள். அவை தலைவனுக்கு மட்டுமன்று; அனைவருக்கும் கூறும் அறவுரை போல உள்ளன.

ஆற்றுதல் என்பது ஒன்று அலந்தவர்க்கு உதவுதல்
போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை
பண்பெனப் படுவது பாடறிந்து ஒழுகுதல்
அன்பெனப் படுவது தன்கிளை செறாஅமை
அறிவெனப் படுவது பேதையார் சொல் நோன்றல்
செறிவெனப் படுவது கூறியது மறாஅமை
நிறையெனப்படுவது மறைபிறர் அறியாமை
முறையெனப் படுவது கண்ணோடாது உயிர்வௌவல்
பொறையெனப் படுவது போற்றாரைப் பொறுத்தல் (கலி, 133)

இவை புதிய முறையில் அறம் புகல்கின்றன. நாம் நினைப்பது ஆற்றுதல் போல் இல்லை. வறியவர்க்கு ஒன்று உதவுதல் (வாய்ப்பேச்சு அன்று).

போற்றுதல் – கூடியவரைப் பிரியாதிருத்தல்

பண்பு – அவரவர் தன்மையறிந்து அதற்கேற்ப நடந்து கொள்ளுதல்

அன்பு – தன் சுற்றத்தை சினந்து நீக்காது, விட்டுக்கொடுத்தல்

அறிவு – மாற்றிப்பேசும் பேதையரின் பேச்சைப்பொறுத்துக் கொள்ளுதல்

செறிவு – நம்பிக்கையாவது முன்பு சொன்னதை பின்பு மறுக்காது இருத்தல்

நிறை – மன அடக்கம் என்பது, மறைபொருளை வெளியிடாது காத்தல்

முறை – அரசாட்சியில் கொலைக்குற்றம் அனைய தீய செயல் புரிந்தோர் மாட்டு, இரக்கம் காட்டாது மரணதண்டனை விதித்தல்

பொறை – பொறுமையாவது தம்மைப் போற்றாது பழித்தவரையும் பொறுத்துக் கொள்ளுதல்

புதிய ஆத்திசூடிகள் போல, இவை புதுமையாய்ப் பொருள் கூறுவது அற நூல்களில் இவ்வாறு கூறுவன மனத்தை ஈர்த்துப் பதியும் என்பதாகும்.

நற்றிணை அகப்பாடலிலும் அறம் கூறும் அழகுண்டு.

தலைவனைத் தோழி பழிக்கவே, தலைவி 'என் தலைவர் அப்படிப்பட்டவர் அல்லர்; நல்லவர்' என்று வாதிடும் கூற்றுள்ள பாடல் இது. இதனை நல்ல ஆளுமையுள்ள ஆடவர்க்கெல்லாம் பொருத்திப் பார்க்கலாம்.

நற்பண்பைவிட்டு இம்மியும் அகலாத, பெருமிதமான தோற்றமுடைய தலைவனை இது படம்பிடிக்கிறது.

இன்று தமிழகத்தில் தலைவர்களாக வரும் இளையோரைப் பார்த்தால் உயர்ந்த எண்ணம் தோன்றவில்லை, சிலர் அடியாட்களோ எனுமாறு தோன்றுகின்றனர். அவர்கள் பேச்சிலும் நடத்தையிலும் இனிமையோ, பண்போ, பணிவோ தென்படவில்லை. பெரிதும் கட்சி நோக்கம் கருதி, 'தாதாக்கள்' எனப்படும் முரட்டுத் தன்மையுள்ளவர்களைச் சட்ட மன்றத்திற்கோ, ஊராட்சிக்கோ தேர்ந்தெடுப்பதால் தலைமைக்கேற்ற உயர்ந்த எண்ணம் தோன்றவில்லை.

கபிலர் ஒரு நல்ல தலைமகனைப் படம்பிடிப்பதைப் பாருங்கள்.

நின்ற சொல்லர் நீடுதோறு இனியர்
என்றும் என்தோள் பிரிவு அறியலரே
தாமரைத் தண்தாது ஊதி மீமிசைச்

சாந்தின் தொடுத்த தீந்தேன் போலப்
புரைய மன்ற புரையோர் கேண்மை

நின்ற சொல்லர்–மாற்றி மாற்றிப் பேசாதவர் சொல்லுறுதி உடையவர் அவர் பேச்சுக்கு மறுபேச்சு எழுவதில்லை. கண்டொன்று காணா ஒன்று பேசியவரல்லர் உண்மை பேசுபவர்.

நீடுதோறினியர் – அவரைப் பற்றி எவ்வளவு காலம் நினைத்தாலும் எந்நாளும் நினைத்துக் கொண்டேயிருந்தாலும் மனத்திற்கு இனிமை தருபவர். நினைத்தாலே இன்பம் தரும் தோற்றமும் முகமும் பண்பும் இனிமையும் உடையவர்.

சிலரை நினைக்க மனம் வராது மீறி நினைத்தால் அருவருப்பாக இருக்கும் வெறுக்கவும் தோன்றும் இதை ஒப்பிட்டால் உண்மை விளங்கும். தாமரையில் மணப்பொடி ஊதி எடுத்து, சந்தன மரத்தில் கூடுகட்டினால் அந்தத் தேனில் இனிப்பும் மணமும் கலந்திருக்கும். அதுபோலப் பெரியவர் நட்புப் பெருமையே தரும். ‘சங்கு சுட்டாலும் வெண்மைதரும்’ என்பது போன்ற தன்மை அது. இப்படிப் பட்ட ஆண்மக்கள் பெருகினால் நாட்டில் மகிழ்ச்சியும் இன்பமும் பொலியும்.

குறுந்தொகையிலும் ஒரு பாடல் வருகிறது. அழகப்பர் கல்லூரியில் ஓர் ஆங்கிலப் பேராசிரியர் திடீரென அவர் அன்பு மனைவிக்கு பக்கவாத நோய். நடக்க முடியாது. கைவைத்த, சாய்விருக்கையில் வைத்து, உருட்டுவதைத் தவிர வேறு வழியில்லை. ஆனால் அந்த ஆங்கிலப் பேராசான் மறுமணம் பற்றிச் சிந்திக்கவே இல்லை; தன் இன்பம் பற்றிக் கருதவே இல்லை. இறுதிவரை கண்ணுங் கருத்துமாகப் புறந்தந்து காப்பாற்றினார். இந்த அன்புக்குப் பெயர் எதிர்பார்ப்பில்லாத அன்பு.

நம் அரசியல் தலைவர்களிடம் பலர் கொளுவுகிறார்கள், பணிகிறார்கள்; நெடுஞ்சாண் கிடையாக விழுந்து, எழுந்திருக்க முடியாமல் திண்டாடுகிறார்கள்; வாயார மிகையாக, வரையின்றிப் புகழ்கிறார்கள். படிப்புப் போதாத, முதுகெலும்பில்லாத அரைகுறைத் தமிழறிஞர்கள் எனத் தமக்குத் தாமே பட்டம் சூடிக்கொள்பவர்கள், கால்கை பிடிப்பதன் மூலமே மேல்நிலை அடைய முயல்கிறார்கள். இது ஒரு நிலை. தமிழக அரசியல் தலைவர்களும் இதையே விரும்புகிறார்கள்.

ஆனால் ஒருதாய் குழந்தைக்காகப் படும்துயரைப் பார்க்கிறோம். உண்மை அன்புடையவர்கள் வேறு; போலிகள் வேறு. எதிர்பார்ப்புள்ள அன்பு போலி – அது நிலைக்காது. உண்மை அன்பு மாறாது – அது எதிர்பார்ப்பில்லாத அன்பு. ஆங்கிலப் பேராசான் தம் மனைவியிடம் காட்டிய அன்பு எதிர்பார்ப்பில்லாத அன்பு.

எதிர்பார்ப்பில்லாத அன்புடையவர்கள் விஞ்ஞானிகள், அறிவியல் மேதைகள், தாயனையவர்கள், பண்பு மிக்கவர்கள் – அவர்கள் பலபோது துன்பப்படவே நேரும். ஆனாலும் அந்தத் துன்பம் துன்பமல்லவாம்; அது துறக்கவுலகத்தை விட மேலான இன்பமாம்

ஒரு தாய் இரவும் பகலும் கண்விழித்து, அயராது பாடுபடும்போது, அதை அவள் உள்ளுணர்வு பேரின்பமாகவே கருதுகிறது. ஆங்கிலப் பேராசான் மனைவியுடன் இன்பம் துய்த்த காலத்தைவிட, அவருக்காகக் கடமையாற்றியபோது பெற்ற இன்பத்தையே பெரிதாகக் கருதினார். இன்றேல் இத்துணையளவு பாடுபட்டிருப்பாரா ?

போலிகளுக்குத் தன்னலஇன்பம் பெரிது. உண்மையானவர்களுக்கு மற்றவர்களுக்காக–நாட்டுக்காக–மொழிக்காக–பொதுநலத்திற்காகப் படும் துயரமே பேரின்பமாகும். குறுந்தொகையில் கபிலர் பாடல் இது. இதிலும் தோழி, தலைவனை 'அன்பிலன்' என்று கூற, தலைவி அதை மறுத்து, ஒருவேளை அவர் அன்பில்லாதவராக இருக்கட்டும்; ஆயினும் நான் அவருக்காகப் படும் துன்பமும் எனக்கு இன்பமே. உலகில் நமக்கு வேண்டியவர்களுக்காக நாம் படும் துன்பத்தைவிட நேரில் காணாதே இனிது இனிது என்று பேசப்படும் அந்தத் துறக்கவுலகமும் சொர்க்க பூமியும் இதைவிட இனிதாகுமோ ?

கறிவளர் அடுக்கத்து ஆங்கண் முறி அருந்து
குரங்கு ஒருங்கு இருக்கும் பெருங்கல்நாடன்
இனியன் ஆகலின் இனத்தின் இயன்ற
இன்னா மையினும் இனிதோ
இனிதெனப் படூஉம் புத்தேள் நாடே (குறு–288)
கறி–மிளகு. முறி–தளிர். இனம்–உறவு,
வேண்டியவர். புத்தேள்நாடு–சொர்க்கவுலகம்
–தலைவியின் உண்மை அன்பைப் பாருங்கள்

நமக்கு வேண்டியவர்களுக்காகப் படும் துன்பந்தான் இன்பம்; சாய்வு நாற்காலியில் படுத்துக் கிடப்பது இன்பமன்று. எருமை மாட்டுக்கும் பன்றிக்கும் எது இன்பம்? கெட்ட நாற்றமுள்ள சகதியிலுள்ள நீரில் மூழ்கிக் கிடப்பது அவைகளுக்கு இன்பம். உலகில் பலரடையும் இன்பம் அத்தகையதே.

நாமும் நன்றாக வாழ்ந்து, பிறர்க்கும் இன்பம் தரும் வாழ்வே சிறந்த வாழ்வு. அதிலும் பிறர்பலர் சிறப்புடன் வாழ அதற்காக தான் துன்பப் படுவது துன்பமன்று. அது துறக்க வுலகத்தை விட இன்பம்.

இத்தகைய ஒப்பற்ற மனிதத்துவ மேம்பாட்டுச் சிந்தனைகளை அறமாகத் தருவன, அவைய இலக்கியம்.

கழைதின் யானையார் என்ற புலவர், வல்வில் ஓரியைப் பாடிய பாடலில், படிநிலை அறம் ஒன்று பகரப் படுகின்றது.

ஈ— என இரத்தல் இழிந்தன்று; அதன் எதிர்
ஈயேன் என்றல் அதனினும் இழிந்தன்று
கொள் எனக் கொடுத்தல் உயர்ந்தன்று; அதன் எதிர்
கொள்ளேன் என்றல் அதனினும் உயர்ந்தன்று (புறம் 204)

ஒருவரது பெருமிதமான வாழ்க்கை பிறரிடமிருந்து பெறுவதில் இல்லை. பிறர்க்கொன்று கொடுப்பதிலேயே உளது. இப்பொது அறம் அழகிய முறையில், இலக்கிய நயந்தோன்றக் கூறப்படுகிறது.

தமிழ்ச்சிந்தனை 'வானம் அளந்தது அனைத்தையும் அளக்கிறது' என்றும் நிலைபெறும் மானுட விழுமியங்களை அவை பகர்கின்றன. இன்றைய நிலையில் மட்டுமன்று, நாளைக்கும் பயன்படுபவை. சிந்தனை உயரஉயர மாந்தர் உயர்ந்தே தீருவர். குருட்டுத்தனமாக மானிட வாழ்வுக்குப் பொருந்தாத பலவற்றை, இடைக்காலத்தே பிற நூல்கள் புகுத்திவிட்டன. இங்கு பகுத்தறிவு மழுக்கடிக்கப்பட்டுவிட்டது. தமிழர்களின் பண்பாடு, மொழி, இன வீழ்ச்சிப்படலம் இன்னமும் நீடிக்கிறது.

புண்ணியம் தேடுங்கள்; சொர்க்க உலகம் புகலாம் என்ற கருத்துப் பரப்பப்பட்டது. எது புண்ணியம்? தமிழர்கள் தம் இனத்தையே பகைத்து, தம்மையும் தமிழையும் பகைப்பாரை வாழவைப்பதே புண்ணியம் எனப்பட்டது.

சித்தர்கள் வாழ்ந்தென்ன? வள்ளலார் வந்தென்ன? தமிழன் இப்போது புண்ணியம் தேடிக் கொண்டிருக்கின்றான். ஆய் என்பானை உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் பாடுகிறார். புண்ணியம் என்னடா புண்ணியம்? ஒன்றைச் செய்து ஒன்றைப் பெறுவது வாணிகம். எதனையும் எதிர்பாராது நல்லதை நல்லதற்காகச் செய்யவேண்டும் என்றார் புலவர். மேலுலக ஆசைகாட்டுவதே தவறு என்றார்.

இம்மைச் செய்தது மறுமைக்கு ஆம் எனும்
அறவிலை வாணிகன் ஆய் அலன் பிறரும்
சான்றோர் சென்ற நெறிஎன
ஆங்குப் பட்டன்று அவன்கை வண்மையே

(புறம்.134)

ஆசை காட்டிக் காசு பறிக்கும் எதுவும் உயர்ந்த சமயவாழ்வில் கிடையாது. 'என்பும் உரியர் பிறர்க்கு' என வாழ்வதே உயரிய வாழ்வு. தமிழர் சமயம் நிலைபெற வேண்டும். தமிழ்க் கடவுளர் முன் தமிழே முழங்க வேண்டும்

ஆன்மீகம் என்ற போர்வையில், அறநெறி என்பது புதைக்கப்பட்டுவிடக் கூடாது. தமிழரின் தூய, நல்ல அறநூல்கள் மாணவர்க்கும், மக்களுக்கும் போதிக்கப்பட வேண்டும்.

அடிக்குறிப்பு

1. அவைய இலக்கியம் – சங்க இலக்கியம்; நிலம் தருதிருவின் பாண்டியன் அவையத்து என்பது தொல்காப்பியப்பாயிரம். பண்டைக் காலத்தில் தமிழ்ப் புலவர் குழு அவை, அவையம் என்றே விளங்கிற்று. சமண ஆசிரியர் வச்சிரநந்தி சமண சங்கத்தைத் தோற்றுவித்தார். அதைத் தொடர்ந்து அவையம் சங்கமாயிற்று என்பது வரலாற்று ஆசிரியர் கருத்து.

# நோற்றலின் ஆற்றல்

-பேராசிரியர் கதிர் மகாதேவன்
முன்னைத் துணைவேந்தர் தமிழ்ப் பல்கலைக்கழகம்

'தவம்' பற்றி இந்த நாட்டில் அனைவரும் அறிந்து வைத்திருப்பது போன்ற எண்ணம் உண்டு. ஆனால், பெரும்பாலோர் தவத்தைப் பற்றி எண்ணும் பொழுதெல்லாம் அது ஏதோ வயதானவர்களும், துறவிகளும், வேலையற்றவர்களும் மேற்கொள்ளும் வித்தையாகும் என்றே எண்ணுகின்றனர். உடலை வருத்திக் காட்டிலும், மேட்டிலும், மலையிலும், குகை இடுக்குகளிலும், கடவுளை எண்ணி மந்திரங்கள் சொல்லி சித்தியும், புத்தியும் பெறுவது என்று எண்ணுவோரும் உண்டு. புராணக் காலத்தில் அஸ்தர, சஸ்தர வித்தைகளைப் பயில்வோர் மந்திரங்களைச் செபித்து ஆற்றல்களை அம்பிற்கும், வாளிற்கும் அளித்துப் பகைவர்களை வெல்வதற்குத் தவம் ஓர் உத்தியாகும் என்று எண்ணும் எண்ணம் இந்நாட்டில் பலரிடமும் காணப்படுகின்றது.

எல்லாச் சமயங்களிலும், தவ வாழ்க்கை சமயத்தின் ஒரு பங்காகவும், பாங்காகவும் இருப்பதைக் காணலாம். மதத் தலைவர்கள், தவத்தைப் பொது மக்களைக் கவருவதற்காகப் பெரிதும் கையாண்டனர்.

'தவம்' மேற்கொள்ளுவது எதற்கு, ஏன், எங்கு, எப்படி, யாது என்று தெரிந்தும், தெரியாமலும் கேட்கின்றவர்கள் பலராவார்.

அண்மைக் காலத்தில் பல இந்தியத் துறவிகள் மேலை நாடுகளுக்குச் சென்று யோக முறைகளைக் கற்றுத் தந்து பொருள் ஈட்டுகின்றனர். இந்திய நாட்டில் 'தவம்' பற்றிய விழிப்புணர்வு பல தவசிகள் இங்குத் தோன்றியிருந்தாலும் தவத்தின் சிறப்பு குறைவாகவே உள்ளது எனலாம்.

திருவள்ளுவர் 'தவம்' என்ற அதிகாரமே எழுதியுள்ளார். அவ்வதிகாரம் ***'துறவறவியல்'*** என்னும் பகுதியில் வைக்கப்பட்டிருப்பதினால், முற்றும் துறந்த முனிவர்களுக்குத் தவம் உரியது என்ற எண்ணம் வன்மை உடையதாக மாறுகிறது. தற்சமயம், தவம் பற்றிய விழிப்புணர்வு ஆங்காங்கே முளைத்திருப்பதைக் காண்கிறோம். தவமென்பது ஆண்களுக்கு உரியது என்று பலரும் கருதி வந்தனர். இடைக் காலத்தில் சிற்சில கதைகளில் பெண்கள்

தவ வாழ்க்கையை மேற்கொண்டார்கள் என்று அறிவோம். '**புனிதவதியார்**' கணவனால் துறக்கப்பட்ட பொழுது துறவியாக மாறினார்; இளம்பெண் ஒருத்தி இச்சமுதாயச் சூழலில் துறவியாகக் காலம் தள்ளுவது அத்துணை எளிதன்று; அதனை உணர்ந்த புனிதவதியார் சிவனை வேண்டி '**பேய்**' வடிவம் கொண்டார் என அறிகிறோம். கையிலைக்குக் கையாலே நடந்து சென்றபொழுது பரமசிவனே வியந்து ***அம்மையே*** என்று அழைத்ததாகப் புராணம் கூறுகிறது.

தவம் என்ற அதிகாரத்தில் சமுதாயக் கருத்துக்கள் பலவற்றை வள்ளுவர் கூறுகிறார். சமுதாயத்தில் பலர் ஏழ்மையில் சிக்கிச் சீரழிந்து அல்லல்உற்று வாழ்க்கையில் அவலம் எய்துவது ஏன்? என்று அறிஞர்கள் முதல் அரசியல்வாதிகள் வரை கேட்கிற கேள்வியை வள்ளுவரும் கேட்டு விடையும் தருகிறார். அக்குறள் வருமாறு;-

> ***"இலர்பலர் ஆகிய காரணம் நோற்பார்***
> ***சிலர்பலர் நோலா தவர்."***

திருவள்ளுவர் இம்மையிலும், மறுமையிலும் நம்பிக்கை கொண்டிருப்பதைப் பல குறள்களில் சொல்லிச் செல்லுகிறார். 'தவம்' செய்கின்றவர்கள் 'திருநிறைச் செல்வர்கள்' ஆவார்கள் என்ற நம்பிக்கை வள்ளுவரிடம் காணப்படுகின்றது.

சங்க இலக்கியத்திலும், இத்தகைய உண்மை ஆங்காங்கே சொல்லப்பட்டிருக்கிறது.

> ***"கடிய ஊர்தலும், நெடிய மொழிதலும்***
> ***செல்வமன்று செய்வினைப் பயன்"***

என்று நற்றிணை கூறும். ஒருவன் மகிழ்வுந்தில் (கார்) விரைவாகச் செல்வதும், அவரிடம் பலர் வேலை செய்வதும் செல்வத்தின் அடையாளமாகக் கொள்ளுதல் கூடாது. அது பிறவிப் பயனாகும் என்று நற்றிணை கூறுவதைக் காணலாம்.

ஒருவர் தாம் எண்ணியதைத் தவம் செய்வதின் மூலம் அடைய இயலும் என்பதை வள்ளுவர்,

> ***"எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியர்***
> ***திண்ணி யராகப் பெறின்."***

என்றும்

***"வேண்டிய வேண்டியாங்கு எய்தலால் செய்தவம்
ஈண்டு முயலப் படும்."*** என்றும், கூறுவர்.

இல்வாழ்விலும், தவம் மேற்கொள்ளலாம்; அதனால், நற்பயன் விளையும் என்பதை வள்ளுவர் உறுதிப் படுத்துகிறார்.

அறிவியலில் பஞ்சபூத நுட்பங்கள் கூறும் விஞ்ஞானக் காலத்தில் தவத்தினால் ஏற்படும் பயனை மறுப்பதில்லை! அறிவியலில் வளர்ச்சி பெற்ற அமெரிக்கா போன்ற நாடுகளிலும் நோயாளிகளை அறுவை சிகிச்சைக்கு ஆயத்தம் செய்யும்பொழுது தியானம் செய்யக் கற்றுத் தருகிறார்கள். தியானம் செய்வதினால், பல்வேறு நன்மைகள் உடலிற்கும், உள்ளத்திற்கும் ஏற்படும் என்றும் அதனால், செல்வம் பெருகும் என்றும் கருதுகின்றனர். என்றாலும், பற்பல துறவிகள் தவம் செய்வதைத் தொழிலாக மேற்கொண்டு இரவும், பகலும் தவம் செய்து உடல் நலத்தைக் கெடுத்துக் கொண்டனர். இதைக் கண்ட சங்கத்துச் சான்றோர் ***கணியன்பூங்குன்றனார்*** பின்வருமாறு பாடுகின்றார்.

***"மரம்சா மருந்தும் கொள்ளார், மாந்தர்
உரம்சாச் செய்யார், உயர்தவம்"***

கணியன்பூங்குன்றனாரின் எச்சரிக்கை மனங்கொள்ளத்தக்கது.

மனித மூளைக்கு நேரடியாக வைத்தியம் செய்ய முடியாது. உலகில் இந்திய நாட்டில் மட்டும்தான் தவம் எனும் தியானப் பயிற்சி இருக்கிறது. தியானப் பயிற்சி செய்யும்பொழுது மூளைக்கு நிறைவான இரத்தவோட்டம் ஏற்படுகிறது. அன்றியும், சுவாசப் பயிற்சியும் ஒரு சீராக அமைகின்றது இதனால், உடல் நலம் மேலோங்குகிறது. இத்துணை நன்மைகள் கிட்டினாலும், இந்நாட்டு மக்கள்—தவம் செய்தலை அன்றாட கடமைகளுள் ஒன்றாகக் கொள்ளவில்லை என்பது வியப்பிற்குரியது எனலாம். தவத்தின் நன்மைகளை மேலை நாட்டினர் புரிந்து கொண்ட அளவு நம் நாட்டினர் தெரிந்து கொள்ளவில்லை.

கூட்டுத் தியானம் நன்மை விளைவிக்கும் அதிர்வுகளை ஏற்படுத்துகின்றது என்ற உண்மையைப் பலரும் அறியார். தியானம் நல்ல எண்ணங்களை – நல்லுணர்வுகளை – எங்கும் பரப்புகின்றன.

# சிலப்பதிகாரம்-காட்டும் கண்ணன்

பேராசிரியர் முனைவர் அமுதன்

பொள்ளாச்சி

**கண்ணன்**

அவன் முகம் இனியது; முடி இனியது; இதழ்கள் இனியவை; இதயம் இனியது; விழிகள் இனியவை; விரல்கள் இனியவை; குழல் இனியது; குறுமுறுவல் இனியது; அவன் பண்கள் இனியவை; அவன் கடித்து கொடுக்கும் பழங்கள் இனியவை.

எவன் இனிமையின் ஊர்வலமோ, எவனிடம் இனிமை இல்லாதவை இல்லையோ, அவன் பெயர்தான் கண்ணன்.

இந்த இனிமைகள் யாவினும் சிறந்த இனிமை, அவன் அன்பர் ஆனோரிடம் கொண்ட எளிமை.

கண்ணனின் இந்த எளிமைக் குணங்களே ஆழ்வார்களின் அருமைப் பாசுரங்களில், தொட்ட தொட்ட இடமெல்லாம் அமுது ஊற்றினை ஒத்துச் சுரந்து கட்டுப்பட்டுக் கிடக்கிறது.

கண்ண பெருமானின் இந்த எளிமைப் பண்பிற்கே பாவடிகள் தேன்வடியப் பாடும் இளங்கோவடிகளும் உள்ளத்தைப் பறிகொடுத்து நிற்கிறார்.

கண்ணன் எனும் அந்த இனிமையின் பேரூற்றை, எளிமையின் எல்லை நிலத்தைத் தம் காவியத்தில் இடம்பெற வைக்க வேண்டும் என்று கருதிய இளங்கோவடிகள், "ஆய்ச்சியர் குரவை" எனும் இசைப்பாட்டுத் தொகுதியைத் தம் காவியத்தில் இடம்நோக்கி இணைத்துக் கொண்டார்.

கண்ணன் என்ற திருப்பெயர் நம்மாழ்வார் திருவாக்கு.

"கண்ணாவான் என்றும்
மண்ணோர் விண்ணோர்க்கு"

"நம் கண்ணன் கண்ணல்லது
இல்லையோர் கண்ணே"

(-திருவாய் 2 : 2 : 1)

என்பார் நம்மாழ்வார். தேவர்க்கும் மனிதர்க்கும் கண்ணாயிருப்பவன். கண்ணில்லாவிடில் எப்படிச் செயல்புரிவது அரிதோ, அப்படியே நித்திய சூரிகளோடு நித்திய சம்சாரிகளோடு வேறுபாடின்றி இவனில்லாமல் ஒன்றும் செய்ய முடியாது.

(எ–டு)

கம்பர் நம்மாழ்வாரின் கண்ணன் எனும் பெயரை எடுத்துக் கொண்டு நயமான விளக்கம் ஒன்று தருகிறார்.

மிதிலை வீதியில் நின்று இராமனின் அழகைப் பருகிய மிதிலை மாதர்கள் இராமனை அப்படியே கண்களால் எடுத்துச் சென்றார்கள். எல்லோருடைய கண்களிலும் இராமன் நிறைந்திருந்தான். ஆதலால், பெரியோர்கள் கண்ணன் என்று இவனுக்குப் பெயரிட்டார்கள். கண்ணன் என்று அவர்கள் பரம்பொருளுக்குப் பெயரிட்டதற்கு இன்று விளக்கம் கிடைத்தது! என்கிறார் கம்பர் பெருமான்.

“யாதினும் உயர்ந்தோர் தம்மை
யாவர்க்கும் கண்ணன் என்று
ஓதிய பெயர்க்குத் தானே
உறுபொருள் உணர்த்தி விட்டான்”

கம்ப 1 : 19 : 6

இங்கு நம்மாழ்வாரை, “யாதினும் உயர்ந்தார்” என்று குறிப்பிட்டிருப்பதால் வேதம் தமிழ் செய்த மாறன்மேல் கம்பருக்கிருந்த பேரன்பும் பெருமதிப்பும் புலப்படுகின்றது.

“காண்பார்க்கும் காணப் படுபொருட்கும் கண்ணாகி” என்பான் கவந்தன்.

காண்பார்–உயிர்(சித்து); காணப்படுபொருள் – அசித்து (சடப்பொருள்கள்); கண்ணாவான் – இறைவன். கண்ணாகிய அவன் இன்றேல் காண்போர் எனப்படும் உயிரும், காணப்படுபொருளாகிய உலகியற் பொருள்களும் பயன் தருவதில்லை. ஆகவே, நம் கண்ணன் கண்ணல்லது இல்லையோர் கண்ணே.” என்றார் நம்மாழ்வார்.

கண்ணபிரான் எளிமையின் எல்லைநிலம்.

இடக்கை வலக்கையறியாத ஏழை ஆயர்களின் அன்புத் தெய்வம் அவன். சிலப்பதிகாரத்தில் ஆய்ச்சியர் குரவை நாடகப்பாணியில் இப்படி ஆரம்பிக்கிறது.

விடிகாலை மதுரைக் கோட்டை முரசும் முழங்குகிறது.

ஐயை, அரண்மனைக்கு நெய்கொண்டுபோய்க் கொடுக்கும் முறை நாள் இது என்று உணர்கிறாள். தயிர் கடைகிறாள் மத்தும் கயிறும் கொண்டு! வெண்ணெய் திரளவில்லை; காரணம் பாலும் தயிராகவில்லை. காளைகளின் கழுத்தில் கட்டியிருக்கும் கழுத்துமணி அறுந்து கணீர் என்று மண்மேல் விழுகிறது.

ஆடுகளின் குட்டிகள் வழக்கம் போல் துள்ளியோடி மகிழ்ச்சிகாட்டவில்லை.

ஏதோ ஒருதீங்கு நிகழவுள்ளது "வருவதொன்றுண்டு" என்று உணர்கிறாள். ஐயை தன் மகளை அழைக்கிறார். மகளே! வருந்தவேண்டா திக்கற்றவர்க்குத் தெய்வமே துணை: நம் குலமுதல் தெய்வமாகிய கண்ணன் அன்று தன் அண்ணன் பலராமனுடனும் நப் பின்னைப் பிராட்டியுடனும் ஆடிய பால சரித விளையாட்டுக்களை மாதர்க் கணியாகிய கண்ணகி, காணக் குரவைக் கூத்தாக இப்போது ஆடுவோம். **நம்பிள்ளை தரும் விளக்கம் இது.**

குரவைக் கூத்து – இடையர் செருக்குக்குப்
போக்குவிட்டு ஆடுவது ஒரு கூத்து.
பிராமணர் ஐச்வரியம் (செல்வம்) விஞ்சினால்
யாகங்கள் பண்ணுமாப் போலே, இடையர்
ஐச்வர்யம் (வளம்) மிகுந்தால், செருக்குக்குப்
போக்கு விடுவது ஒன்று.
கோவலனும் கண்ணகியும் ஒருசேர இருப்பது
கண்டு, தங்கள்குல நப்பின்னை
கண்ணனும் ஒன்றாய்க் காட்சி தருவதாகவே
கண்டு மகிழ்கின்றனர் ஆய்ச்சியர்
கண்ணன் என்னும் கருந் தெய்வத்துக்கும்
ஆய்க்குலத்துக்கும் அத்தனை உறவு! கண்ணகி
நாத்தூண் நங்கை! (நாத்தனார்)!
"அத்தினத்துக்கும் ஓட்டைக் கைக்கும்
ஆயிரம் காதம்!"
பஞ்சவர்க்குத்தூது – பாஞ்சாலி மங்கல

நாலதுக்காக மாமா ஆடட்டும்
மார்கழிப் பாடாரம்

கண்ணனின் திருவிளையாடல்களைக் கொண்ட இக்குரவைக் கூத்தை நிகழ்த்தினால், நம்பசுக்களும் கன்றுகளும் துன்பம் நீங்கும் என்று கள்ளங்கபடு காணாத ஐயை தன் மகள் மாதரியிடம் கூறுவதாக ஆய்ச்சியர் குரவை ஆரம்பிக்கிறது.

இதனால், வெள்ளையுள்ளம் மேவிய அந்த ஆய்ச்சியர்கள், திக்கற்று நிற்கையில் துணையாக வந்து உதவுதற்கு அவர்களுக்குக் கண்ணனே உரிய தெய்வம் என்றாகிறது.

இந்த ஏழைகளின் கைக்கெட்டும் தூரத்தில் காத்து நிற்கும் தெய்வம் கண்ணன் ஒருவனே. அவனின் சுலபனாந்தன்மையை, சௌலப்பியத்தை இளங்கோவடிகள் இங்கு சொல்லாமல் சொல்கிறார்.

கதியற்றவர்களின் கதியாக நிற்கும் தெய்வம் கண்ணனே என்று காட்ட இங்கு ஆசிரியர் இளங்கோஅடிகள் ஐயையின் வாய்மொழியை அழகுறப் பயன்படுத்திக் கொண்டார். சௌலப்பியம் – தமிழில் நீர்மையாகும். நீரின் தன்மை பள்ளம் பாய்தல், தாழ்ந்தோருக்கு உதவ ஓடிவரும் தெய்வம் கண்ணனாகிறான்.

கண்ணன் "கதியற்றவரின் கதியாகத் திகழ்கிறவன். சுதந்திரமிக்குள்ள ஆயர்களைக் காட்டிலும், சுதந்தரமற்ற ஆய்ச்சிகளிடம் மிகுந்த அன்புடையவனாய் இருப்பானாம் அவன்.

ஆய்ச்சியர்களைக் காட்டிலும் சுதந்தரமற்ற ஆயர் சிறுமிகளிடம் அன்புமிகப் பூண்டவனாம் அவன். அவர்களைக் காட்டிலும் சுதந்திரமற்றுத் தன்னை அண்டி இருக்கும் பசுக்களிடம் மிகுபிரியம் கொண்டிருப்பானாம் அந்தக் கண்ணன்.

பசுக்களைக் காட்டிலும் அபலைகளான கன்றுகளிடம் அவன் காதல் இன்னும் விஞ்சியிருக்கும்" என்று ஆசாரியப் பெருமக்கள் கண்ணனின் எளிமையில் ஈடுபட்டு உருகுவர்.

"மழக்கன்றினங்கள் மேய்த்துத்திரிவான்!"

பெரிய1 : 2 : 20

"கன்று மேய்த்து விளையாடும் கோவலன்"
"கன்று மேய்த்துகக்கும் காளை"

நா : 12 : 8

என்றெல்லாம் ஆழ்வார் பெருமக்கள் கண்ணனின் இந்தச் சௌலப்பியம் குறித்து உருகுவர்.

கண்ணனின் அந்தச் சுலபனாந்தன்மையைக் காட்சிப் படுத்துதற்கு "ஆய்ச்சியர் குரவை" இளங்கோவடிகட்கு அரிய வாய்ப்பாய் அமைந்தது.

கன்று குணிலாக் கனியுதிர்த்த அகடிதகடநா சாமர்த்தியன் (மக்களால் செய்தற்கரிய செயல்கள் செய்தவன்)

இன்று நம் ஆநிரைமொய்க்கும் தொழுவத்துக்குக் குழலூதிய வண்ணம் கண்ணன் வருவான் என்று ஆய்ச்சியர்கள் திடமாக நம்புகின்றனர். அவன் கொன்றையந் தீங்குழல் கேட்போம் என்று குமையாத நம்பிக்கையுடன் உள்ளனர். ஆய்ச்சியர்கள் அவர்கள் அநுபவம் அது!

"கன்று குணிலாக் கனியுதிர்த்த மாயவன்
இன்று நம் ஆனுள் வருமேல், அவன் வாயில்
கொன்றையந் தீங்குழல் கேளாமோ தோழி!"

பாம்பு கயிறாகக் கடல் கடைந்த சாதனையாளன் ஈங்கு நம் ஆனுள் அழைக்க வருவான் என்பது அவர்கள் திட உறுதி. கொல்லையுஞ் சாரல் குருந்து ஒசித்த மாதவன் இன்று முல்லையந் தீங்குழல் ஊதிவருவான் என்கின்றனர். இடக்கை வலக்கை அறியாத இவ்வேழைகளின் உறுதியை என் என்பது "நம்பினோர் கெடுவதில்லை நான்குமறைத் தீர்ப்பு."

வடவரையை மத்தாக்கி வாசுகியைக் கயிறாக்கிக் கடல் வயிறு கடைந்தவன் இந்த வைகுந்தநாதன்.

அந்தப் பெருமானே கண்ணன் எம்பெருமானாய் வந்து, அசோதைப் பிராட்டியின் தயிர்கடையும் மத்தால் அடியுண்டு அழுகிறான்! கடலுக்கும் மத்திட்டுக் கலக்கியவன் தயிர்மத்தில் அடிப்பட்டுக் கலங்குகிறான். கடல் வயிறு கலக்கியவன் கைகள் இன்று அசோதை கையில் கடைகயிறால் அடிவாங்கி நிற்கும் நீர்மையை என் என்று போற்றுவேன்? என்று இளங்கோவடிகள் உருகுகின்றார்.!

உலகெல்லாம் உண்ட திருவாயன் தான் இன்று, இடைச்சியர் உறிவெண்ணெய்க்கு ஏங்கிய வாயோடு நிற்கிறான்.!

மூவுலகையும் தன் செங்கமலப் பாதத்தால் இரண்டடியாய் அளந்தவன் தான், இன்று, அன்பர்களாம் பஞ்சவர்களைக் காக்கத் தூதாகக், கல்லிலும் முள்ளிலும் நடந்து திரிகின்றான்.!

கோடை வெய்யிலிலே வருந்தியவர்கள், குளிர் நீரிலே விழுந்து நீரைக் குடிப்பதும், அதை வாரி மேலே இறைத்துக் கொள்வதும், செய்வதுபோலே சம்சாரமாகிற கோடை வெய்யிலிலே வருந்திய இவர்களும் அவ்வெப்பத்திற்குப் போக்கு வீடாக எம்பெருமானின் குணங்களாகிற குளிர் நீரிலே குடைந்தாடுகிறார்கள்.

இவ்வாறெல்லாம் எம்பெருமான் கண்ணனின் எளிமையை, ஆழ்வார்களைப் போலவே, ஏன் ஆழ்வார்களையும் சில கூறுகளில் மிஞ்சிய ஆழ்வாராய் இளங்கோ அடிகள் நைந்து ஊருகிப் பாடுகிறார்.

குட்டைவாமனனாய் வந்து சிறிய அடிகளைக் காட்டி, கையிலே நீர்பட்டதும் வெயில்பட்ட மூங்கில் போலே திருவிக்கிரமனாய் மாறி பேரடி கொண்டு, உலகளந்தது சரியாகத் தோன்றவில்லை இளங்கோ அடிகளுக்கு! காட்டுவது சிற்றடி அளந்தது பேரடி! வாமனனை ஏமாற்றியது தானே இது! இது "முறை நிரம்பாவகை, ஆகவே இச்செயலை முடித்த செயல்" என்று அடிகள் சுட்டுகிறார்.

அவ்வாறு முறையில்லா முறையில் உலகளந்ததால் தான் இராமனாகி 14 ஆண்டுகள், திருவடிகள் சிவந்து கொப்பளிக்க கானகத்தில் அலைந்து திரிய வேண்டி நேர்ந்தது என்று வஞ்சப் புகழ்ச்சி தோன்றப் பாடியுள்ளார் அடிகள்.

கடவுள் ஏமாற்றினாலும் தண்டனையுண்டு என்று கூறாமல் கூறுவார் போன்று இங்கு அடிகள்,

"மூவுலகும் ஈரடியால்
முறைநிரம்பா வகை முடித்துத்
தாவிய சேவடிகள் சேப்பத்
தம்பியுடன் கான்போந்து"

என்று அடிகள் கூறும் நுட்பம் கற்பாரை வியக்க வைக்கிறது.!

"கண்ணன் மத்துறு கடை வெண்ணெய் களவினில். கட்டுண்டு உரலினோடு இணைந்திருந்து ஏங்கிய எளிவு எத்திறம்?" என்று ஆறுமாதமும்; கண்ணன் பிறந்தவாறும், வாழ்ந்தவாறும், பெரிய பாரதம் கைசெய்து, ஐவர்க்குத் திறங்கள் காட்டிச் செய்த

மாயங்களையெண்ணி ஆறுமாதமும் நம்மாழ்வார் உண்ணாது உறங்காது மோகித்துக் கிடந்தார் என்பது ஐதீகம்.

எல்லா உலகுக்கும் ஈசனாய் இருப்பவனைக் கட்டவும், அடிக்கவும் திட்டவும் படியான வாய்ப்பு யசோதை என்னும் ஓர் ஆய்ச்சிக்குக் கிட்டியது. ஆதலால் அவளை அசோதை எண்ணாமல் "அசோதையார்" என்று அழைத்து மகிழ்கிறார் அடிகள்.

"கடல் வயிறு கலக்கிய கை அசோதையார்
கடைகயிற்றால்
கட்டுண்கை, மலர்க்கமல உந்தியாய்! மாயமோ?
மருட்கைத்தே"

வெண்ணெய்க் களவுக்கு இவனை உரலோடு சேர்த்துக் கட்ட யசோதைக்குக் கயிறு போதாது; இவனை விட்டு விட்டு கயிறு எடுத்துவரப் போனால் இவன் ஓடிவிடுவான்; தீம்பன் என்செய்வேன்! என்று யசோதைப் பிராட்டிபடும் மன உளைச்சலைக் காண இயலாமல் தன் பொன்னுடலைச் சுருக்கிக் கொண்டு "கட்டிக்கொள்" என்றானாம் எம்பெருமான்!

அதனால் "கட்டுண்ணப் பண்ணிய அப்பன்" என்பார்கள் ஆழ்வார்கள்.

எல்லா விருப்பங்களும் ஈடேறிக் குறைவிலா நிறைபொருளாகிய எம்பெருமான் வெண்ணெய்க் களவு செய்தது ஏன்?

அடியார்கள் தீண்டிய பொருளைத்தானும் தீண்டி உண்ணும் பேராசையே அதற்குக் காரணம் என்பார்கள் ஆசிரியர்கள்.

"சர்வேசுவரன் ஒரு குறையுடையவனாய் வந்து அவதரித்து, அடியார்கள் தீண்டிய பொருளை உண்ணாமல் தரியானாய், அதுதான் நேர்வழியிலே கிட்டாமையாலே களவு செய்து; வாயது கையதாக அகப்பட்டுக் கட்டுண்டு அடியுண்டு நின்றதுவே சௌலப்பியம்" என்னும் திருவாய்மொழி ஈடு.

"வைகலும் வெண்ணெய்
கைகலந்து உண்டான்
பொய் கலவாது என்
மெய் கலந்தானே!"

என்று வெண்ணெய்க் களவில் ஈடுபடுவர் நம்மாழ்வர். (திருவாய் மொழி 1 : 8 : 5)

ஆழ்வார்களும் ஆசாரியர்களும் விரித்துள்ள இத்தனை பாசுரங்களுக்கும் விரிவுரைகளுக்கும் ' மூலவிதை இளங்கோவடிகளின் "ஆய்ச்சியர் குரவை"யில் ஊன்றப்பட்டுள்ளது எனலாம்.

கண்ணன், பள்ளம் பாயும் வெள்ளம் அனைய தயாளன்.

தீனரைக்காக்க ஓடும் தீனதயாளு. எளிமையின் எல்லை நிலம். ஆய்ச்சியர் மாட்டு அவன் காட்டிய அன்புப் பெருக்கு, தீனர் தயாளன் இறைவன் என்பதன் குறியீடு.

இத்தனையையும் சுட்டி நிற்கிற எழில் ஓவியம், இளங்கோவடிகள் தீட்டியுள்ள "ஆய்ச்சியர் குரவை".

ஆய்ச்சியர் குரவையில், கண்ணன் ஆய்ச்சியர் துகில் ஒளித்தல், சக்கரத்தால் பொழுதை மறைத்தல், பாம்பு கயிறாகக் கடல் கடைதல், குருந்த மரத்தை ஒசித்தல், கன்று குணிலாக் கனியுதிர்த்தல், நப்பின்னை நம்பி, மூத்தபிரான் பலராமன் ஆகியோருடன் குரவையாடல், ஏழு காளைகளை அடக்கி, நப்பின்னைப் பிராட்டியை மணம் முடித்தல், அசோதைப் பிராட்டியார் கண்டிப்பு, துவராபதி வாழ்க்கை கருடப்புள் ஊர்தல், திகிரிப்படை தரித்தல் – முதலிய அத்தனை அற்புதச் செயல்களையும் "ஆய்ச்சியர் குரவை"யின் ஒரு சில பக்கங்களிலேயே பதிவு செய்துவிட்டுப் போயிருக்கிறார் அடிகள்.

இளங்கோவடிகளின் இந்த "ஆய்ச்சியர் குரவை"ப் பதிவின் விரிவே, திருவிக்கிரம அவதாரமாய் தமிழ்நாட்டு வைணவப் பேருலகமாய் மலர்ந்திருக்கிறது என்பது மிகைக் கூற்றாக விளம்பியது ஆகாது எனலாம்.

# உதயணன் வரலாறு

பேராசிரியர் முனைவர் சுப. அண்ணாமலை

கொங்குவேளிர் என்னும் பெரும்புலவர் இயற்றிய 'கொங்கு வேண்மாக்கதை' எனப் பெயர்கொண்ட 'பெருங்கதை'யை உதயணன் வரலாறு எனப் பெயரிய கட்டுரைத் தொடராக வழங்கும் சிறு முயற்சியைத் தொடங்குகிறேன்.

***உதயணன்*** பாரதத்தின் வடபால் வந்தவ நாட்டு மன்னன்; ***சதானிகனின்*** மகன். தலைநகர் ***கௌசாம்பி***. சதானிகனின் கோப்பெருந்தேவி ***மிருகாபதி***. அவள் சேதி நாட்டில் ***வைசாலி நகரில்*** ஆட்சிபுரிந்த ***சேடகனின்*** மகள்.

சேடகன் அரசைத் துறக்கக் கருதித் தன் மக்கள் பதின்மருள் ***விக்கிரன்*** என்பானிடம் அதனை ஒப்பித்து விபுலம் என்னும் மலையில் தவம் புரிந்தான்.

காலம் சென்றது....... மிருகாபதி கருவாய்க்கப் பெற்றாள். அது வளரும்போது, ஒருநாள், அவள் செவ்வாடை, செந்நிற மாலை அணிந்து அயர்ந்து உறங்கினாள். ஒரு சரபப் பறவை, தசைப்பொதி என்று அவளைத் தூக்கிச் சென்று, விபுல மலையில் முனிவரின் தவச்சாலையருகே வைத்து, உண்ணத்தொடங்குகையில் அவள் துயிலுணரவே, பறவை முயற்சியை விட்டுப் பறந்தது.

அவள் சுற்றும் முற்றும் மருண்டு நோக்கிப் புதிய சூழலை உணர்ந்து திகைத்தாள். வான்வழி எடுத்துவரப்பட்ட அதிர்ச்சியும், அயர்ச்சியும் சேர, கருவேதனை மிகுந்து ஓர் ஆண்மகவை ஈன்றாள். குழந்தையைத் தழுவி மகிழ்ந்தாலும் அதன் நிலைக்கு வருந்திப் புலம்பினாள்.

அவள் அழுகைக் கூவலொலி சேடக முனிவர்க்குக் கேட்க அவர் வந்து தம் மகளென அறிந்து அழைத்துச் சென்று, ***பிரமசுந்தர முனிவர்***, அவர் மனைவி ***பரமசுந்தரி*** ஆகியோரிடம் ஒப்புவித்தார்.

சேடகர் குழந்தை சூரியத் தோற்ற வேளையில் தோற்றங்கொண்டமையால் **உதயணன்** எனப் பெயர் சூட்டினார். உதயணன் அவரிடத்தும் பரமசுந்தரரிடத்தும் பொதுவான கல்வி கலைகளையும் அரசர்க்குரியவற்றையும் கற்றான். பிரம சுந்தரரின் மகன் யூகிபால் நட்புப் பூண்டான். அவ்விருவரும் கல்வி கேள்விகளிலும் மதிநுட்பத்திலும் சிறந்தனர்.

பரமசுந்தரர் உதயணனுக்கு யானையின் சினத்தை மாற்றி அடக்குதற்குரிய மந்திரத்தைக் கற்பித்து, யாழ் வாசிக்கும் கலையையும் பயிற்றுவித்தார். **கோடபதி** என்னும் யாழையும் அளித்தார். அவன் அதை வாசிக்கும்போது விலங்கு, பறவை முதலியன வந்து, அவனது ஏவலைக் கேட்பது கண்ட முனிவர் வியந்து யாழினை அவனுக்கே உரிமைப் படுத்தியதோடு யூகியையும் ஒப்படைத்தார்.

பின்பு ஒருநாள் உதயணன் மந்திர நினைவோடு கோடபதியை வாசித்தபோது தெய்வயானை ஒன்று அவனருகே வந்து, அன்பு பாராட்டி அவனது ஏவலைச் செய்தது. அவன் அதன் மீதேறித் தனதிடத்திற்கு வந்தான்.

ஒருநாளிரவு, அவ்யானை அவன் கனவில் தோன்றி, "என்மேற் பாகரை ஏற்றினாலும் என்னைத் தோற்கயிற்றால் கட்டினாலும், யான் உண்பதற்கு முன் நீ உண்டாலும் உன்னைப் பிரிந்து சென்று விடுவேன்" எனக் கூறியது. அவன் துயிலுணர்ந்து, அன்று முதல் அதன் கூற்றுப்படியே ஒழுகலானான்.

வைசாலி நகரத்தரசன் விக்கிரன் அரசைத் துறக்கக் கருதிச் சேடக முனிவரின் இசைவுபெற அவரது தவச்சாலைக்கு வந்தான். அங்கு உதயணனைக் கண்டு அவனது தோற்றப்பொலிவால் ஈர்க்கப்பட்டு, "இவன் யார்" எனத் தந்தையைக் கேட்க, அவர் நிகழ்ந்தவற்றைக் கூறி விரைவில் அவனைக் கௌசாம்பி நகரத்திற்கு அனுப்பவிருப்பதையும் கூறினார். விக்கிரன் அவரை வேண்டி, உதயணனை முதற்கண் சைவாலி நகருக்கு அரசனாக்கித் துறவு பூண்டான்.

உதயணன் யூகியைத் தன் முதலமைச்சனாக்கிப் பகைவென்று அவர் நாடுகளைத் தன் வயமாக்கினான். இது இவ்வாறு இருக்க, கௌசாம்பியில் சதானிகன் மிருகாபதியைக் காணாமல் பணியாட்களை ஏவிப் பலவிடங்களிலும் தேடச்செய்தான். ஒரு முனிவரிடம் அவன் தன் குறையைத் தெரிவித்தபோது, அவர் தமது முக்காலஉணர்ச்சியால் மிருகாபதிக்கு நிகழ்ந்தவற்றைக் கூறினார். அவன் உடனே வைசாலி நகரையடைந்து, தன் தேவியையும் மகனையும் கண்டு அளவளாவினான். பின்னர் மிருகாபதியுடன் கௌசாம்பிக்கு மீண்டு, ஆட்சியைத் தொடர்ந்தான். மிருகாபதி இரண்டு ஆண்மக்களைப் பெற்றெடுத்தாள். அவர்கள் ***பிங்கலன், கடகன்*** என்போர். சிலகாலஞ் சென்ற பின் சதானிகன் உதயணனிடம் அரசை ஒப்புவித்துத் துறவு மேற்கொண்டான். உதயணன் வைசாலிக்கு யூகியை அரசனாக்கினான். அவனைத் தவிரக் கல்வியறிவிற் சிறந்த ***வயந்தகன், உருமண்ணுவா, கிடவகன்*** என்னும் மூன்று அமைச்சர்கள் அவனுக்கு உண்டு.

ஒருநாள் உதயணன் சேனையையும் தெய்வ யானையையும் நகரில் விட்டு, உருமண்ணுவா முதலிய சில தோழரோடும், சில வீரரோடும் ஒரு காட்டில் வேட்டையாடச் சென்றவன், நீர்வேட்கையால் வருந்தியபோது, தெய்வதோற்றமுடைய ஓர் இளைஞன் தண்ணீர் அளித்து, தன்னை அவர்கட்கு நட்பாகவும் அளித்து, தக்க நேரத்தில் தன்னை அழைப்பதற்குரிய மந்திரத்தையும் கூறிச் சென்றான்.

ஒருநாள் நாடக மகளிரின் ஆடலைக் கண்டு களித்த உதயணன் தெய்வயானையை மறந்து அதற்கு முன்னதாக உணவு கொண்டான். பின்பு அவன் கோடபதியை வாசித்தபோது, அது வாராமை கண்டு, தன் பிழைக்கு வருந்தினான். அதனைத் தேடுதற்குப் பணியாட்களை விடுத்ததுடன் தானும் நாடோறும் காட்டிற்கு சென்று தேடிவரலானான்.

இது இவ்வாறாக, ***அவந்தி*** நாட்டில் பிரச்சோதனன் என்னும் பேரரசன், பல அரசர் திறைசெலுத்திப் பணிகேட்க அரசு புரிந்து வந்தான். அவன் முதன்மைத் தேவி ***பதுமகாரிகை***

என்பாளிடம் அவனுக்கு **வாசவதத்தை** என்னும் மகள் இருந்தாள்.

ஒருநாள் அவன் அமைச்சன் சாலங்காயன் "உதயணனும் யூகியும் திறைசெலுத்தாமல் உள்ளனர்" எனக்கூற, பிரச்சோதணன் அவர்களை உடனே பிடித்துவருமாறு கூறினான். சாலங்காயன் உதயணனுக்குத் தெய்வயானையின் துணையும் யூகியின் துணையும் நீங்காது இருப்பதாலும், யூகி வெல்லுதற்கு அரியனாதலாலும், அவர்கள் இருவரையும் ஒன்றுசேரவிடாமல் தடுத்து, உதயணனை ஒரு தந்திரத்தால் பிடித்துவர வேண்டும் எனக் கூறி, யூகியை வைசாலி நகரத்திற்குள் சென்று எதிர்க்கவும், தெய்வயானையைப் போல் ஒரு யானையைச் செய்விக்கவும் பேரரசனது இசைவைப் பெற்றான்.

அதன்படி அவனது சேனையின் ஒரு பகுதியினர்க்கும், யூகிக்கும் சைவாலியில் பெரும்போர் நிகழ்ந்தது.

தொண்ணூற்றாறு வீரர்கள் ஆயுதங்களோடு தன் வயிற்றுப்பகுதியில் மறைந்திருக்குமாறு செய்யப்பட்ட மாயயானை காட்டில், உதயணன் வழக்கமாக தேடுமிடம் ஒன்றில் நிறுத்தப்பட்டது. அதைக் கண்டு தனது யானையெனக் கருதிய உதயணன் தனியே அதனருகிற் சென்று யாழ் வாசித்து மகிழ்ந்து நின்றான். அதனுள் மறைந்திருந்த வீரர்கள் வெளியே வந்து அவனோடு போரிட்டனர். நிகழ்ந்த வஞ்சனையால் மிகச் சினங்கொண்ட உதயணன் அவர்கள் அனைவரையும் கொன்றான். தொலைவில் ஒரு சேனையுடன் மறைந்து நின்ற சாலங்காயனும் வந்து போர் செய்து தோல்வியுற்றான். அவன் அமைச்சன் ஆதலின் உதயணன் அவனைக் கொல்லாமல் விட்டுவிட்டான். உதயணன் ஒரு யானையை வெட்டியபோது அவனது வாள் அதன் உடம்பில் பட்டு உடைந்தது. வெறுங்கையாக நின்ற அவனைப் பகை வீரர்கள் சூழ்ந்தனர். அவன் நிகழ்ந்தவற்றை ஓர் ஓலையில் எழுதி, வயந்தகன் வாயிலாக யூகிக்கு அனுப்பிவிட்டுச் சிறைப்பட்டு உச்சயினி நகரில் இருட்டடைந்த சிறையில் அடைக்கப்பட்டான்.

செய்தியறிந்த யூகி வருந்தி, "யான் பிரச்சோதனனது நகரத்தை ஓர் யானையைக்கொண்டே அழிக்கச்செய்து, உதயணனை மீட்பேன்". அந்நகரைத் தீக்கிரையாக்குவேன். உதயணனைக் கொண்டு, பிரச்சோதனன் அறியாமல் *வாசவதத்தையை* வந்து கொண்டு வரச்செய்து அவளை அவனுக்கு மணம் முடிப்பேன் எனச் சபதம் செய்தான்.

அவந்தி நாட்டின் எல்லையில் உள்ள **புட்பக** நகரத்தில்—தான் இறந்துவிட்டதாக ஒரு செய்தியை எங்கும் பரப்பச் செய்தான். சுடுகாட்டில் ஒரு பிணத்திற்குத் தன் அணிகலன்களை அணிவித்து அதனை எரிக்கச் செய்தான். மாறுவேடம் பூண்டு உச்சயினியின் புறத்தேயுள்ள காளி கோயிலில் தங்கினான். வயந்தகன் முதலில் தோழர்களையும் கூனர், குறளர் முதலியோரையும் மாறுவேடம் கொண்டு, அரண்மனையில் பல்வேறு பணிகளைப் பெற்று, இருக்குமாறு பணித்தான். அவர்கள் அரண்மனைச் செய்திகளை அவ்வப்போது அவனுக்குத் தெரிவித்தும், தத்தம் பணிகளை செவ்விதிற்ச் செய்தும் வந்தனர்.

இது இவ்வாறு இருக்க, சேதி நாட்டின் பகைவனாகிய ஆருணி என்பான், உதயணன் சிறைப்பட்டதை அறிந்து, கௌசாம்பி நகரைக் கைப்பற்றி ஆளத் தொடங்கினான். உதயணனின் தம்பியர் பிங்கலனும், கடகனும் சில படைவீரரோடு வேறு வேறு இடம் சென்று மறைந்து வாழ்ந்தனர்.

உச்சயினியில் யூகி நோயுற்றவன் போலவும் தெய்வ ஆவேசம் கொண்டவனைப் போலவும் காட்டிக்கொண்டு வீதிகளில் திரிந்து, உதயணன் அடைபட்ட சிறைச்சாலையைக் கண்டுபிடித்து, அதனை அடைந்து உதயணனும் தானுமே அறிந்த ஒரு பாடலைப் பாடினான். உதயணன் வெளியே வர அவனைக் கண்டு மகிழ்ந்தான். இவ்வாறாகச் சிலநாள் நகர வீதிகளில் யாரும் ஐயுறாதவாறு திரிந்த யூகி, ஒருநாள் நள்ளிரவில் பேய்வடிவத்துடன் அரசனது பட்டத்து யானையாகிய **நளகிரியின்** அருகிற் சென்று, அதனறிவு சிதையுமாறு அகிற்புகை யூட்டியும், ஒரு மருந்தைக் கொடுத்தும் மதவெறியையும் கோபத்தையும்

உண்டாக்கி யானைகளின் மொழியில் அதனோடு பேசினான். அதன் செவியில் ஒரு மந்திரத்தைக் கூறினான். உடனே அது கட்டுத் தறியை முறித்து சங்கிலியை அறுத்துக்கொண்டு ஓடி, ஊரை அழிக்கத் தொடங்கியது.

ஊர் மக்களின் கூக்குரலைக் கேட்ட பிரச்சோதணன், சாலங்காயனை யானையை அடக்கும் உத்தி குறித்துக் கேட்டபோது, அவன் சிறையில் உள்ள உதயணன் யாழ் வாசித்தால் மட்டுமே யானை அடங்கும் எனக் கூறினான்.

மன்னன் ***சிவேதன்*** என்னும் முதிய அமைச்சனைப் பணிந்து உதயணனைச் சிறையிலிருந்து மரியாதையுடன் அழைத்துவரச் செய்து, பல்லக்கில் மதங்கொண்ட நளகிரியின் அருகில் செல்லுமாறு செய்தான். உதயணன் முதலில் மந்திரத்தால் யானையை அசையாமல் நிறுத்தி, மிகுந்த கருணையுடன் யாழ் வாசித்தவாறு அதன் அருகில் சென்றான். அது அவனை வணங்கி அவனது ஏவல்கேட்ப நின்றது. உதயணன் அதன் பிடரியின் மீதேறி நகர வீதிகளில் உலாவந்து, அரண்மனையில் புலிமுகமாடத்தில் நின்ற பிரச்சோதணனைக் கண்டான்.

மன்னன் அவனுக்கு உயர்ந்த பரிசொன்றை வழங்கி "உன் அரிய செயலைக் கண்டு நான் மகிழ்ந்தேன். நீ கற்ற கலைகளை அறிய விருப்பமுடையேன்" என்று கூற உதயணன் தான் கற்ற கலைகளை விரித்துரைத்தான்.

(தொடரும்)

# முன்னுதித்த நங்கையா?

-ஆதி. பாலசுந்தரன்.

## 01- முன்னுரை

குமரிமாவட்டம் சுசீந்தரத்தில் முன் உதித்த நங்கை அம்மன் திருக்கோயில் அமைந்துள்ளது. சுசீந்தரம் தாணுமாலயப் பெருமான் திருக்கோயில் கட்டுவதற்கு முன்பே, சங்க காலத்திலேயே இவ்அம்மைக்குக் கோயில் கட்டப்பட்டுவிட்டதாகச் சுசீந்தரம் தல புராணம் கூறுகிறது.

## 02 - ஆன்மீக உணர்வு

அத்திரி முனிவரின் மனைவி அனசூயை வேண்டிக் கொண்டதற்கு இணங்க, தேவியே அவள் முன் உதித்தாள் என்பதால் முன் உதித்த நங்கை என அழைக்கப்படுகிறாள் எனக் கூறப்படுகின்ற ஆன்மீக உணர்வு அடிப்படையில் எழுந்த சில புராணக் கதைகளும் சொல்லப்படுகின்றன.

## 03 - முதல் சேர மன்னன்

ஆனால், முன் உதித்த நங்கை எனச் சொல்வது சரியா? என்பதே இங்கு ஆய்வுக்கு உரியது.

பதிற்றுப்பத்து போன்ற சங்க இலக்கியங்கள், கல்வெட்டுக்கள், முன்பு சேர நாட்டுக்கு வந்த மேல் நாட்டுப் பயணியரின் குறிப்புக்கள் ஆகியவற்றைச் சான்றுகளாகக் கொண்டு எழுதப்பட்ட சேர மன்னர் வரலாற்று நூல்கள் உள்ளன.

சேரர் வரலாற்றில், முதன் முதலாக அறியப்படுபவன் அதாவது வரலாற்றுக் கண்களுக்கு முதன்முதலாகத்

தென்படுபவன் பெருஞ்சோற்று உதியஞ் சேரலாதன் என்னும் சேர மன்னனே.

ஆயினும், இவனுடைய முன்னோர் யாவர்? அவர்தம் தலைநகர் யாது? அவரைப் பற்றிய முழுமையான செய்திகள் யாவை? என்பனவற்றை அறிந்துகொள்ள, தக்க வரலாற்றுச் சான்றுகள் எவையும் இதுவரை கிடைக்கவில்லை.

## *04 - ஆதன்*

ஆதன் என்னும் பழைய பெயர் மட்டுமே இலக்கியச் சான்றாகத் தெரிகிறது. பிற செய்திகள் தெரியவில்லை.

எனவே, ஆதன் என்னும் அரசன் மரபிலே வந்தவன் என்பதும் சேரர் மரபிலே தோன்றியவன் என்பதும் புலப்பட உதியஞ்சேரலாதன் என்னும் பெயருடன் வழங்கப்படுகிறான்.

## *05 - மூவேந்தர் தோன்றிய காலம்*

சேர, சோழ, பாண்டிய மன்னர் மரபினர் தோன்றிய காலம் எது? *இம் மூன்று மரபினருள் முதல் அரசன் யாவன்?* இவர்களின் தோற்றம் பற்றிய வரலாறு யாது? என்பன பற்றிய விவரங்கள் எதுவும் இப்போதைக்கு *கிடைக்கவில்லை.*

கல்வெட்டுக்கள், அகழ்வு ஆய்வு, செயற்கைக் கோள் வழி புவி ஆய்வு முதலிய பல அறிவியல் சான்றுகள் கிடைக்கும் போது மேலும் தெளிவு கிடைக்கும்.

## *06 - மூவேந்தர் பழைமை பற்றி*

இம்மூன்று அரச மரபினரைப் பற்றிய வரலாற்றுச் சான்றுகள் எவையும் அறிந்து கொள்ளும் வாய்ப்பு இல்லாமையால், மிகப் பழைய காலத்திலேயே இம்மூன்று மரபினரும் தோன்றி விட்டனர் என்னும் எண்ணம் ஏற்படும் விதத்தில்,

தொன்று தொட்டு வருதல் சேர சோழ பாண்டியர் என்றாற் *போல என்கிறார் பரிமேலழகர் திருக்குறள் உரையில்*

அதாவது, தொன்று தொட்டு வருதல் என்னும் தொடருக்குச் சேர சோழ பாண்டிய மரபினர் தொன்று தொட்டு வருதல் போல என உவமையாகக் கூறுகின்றார். படைப்புக் காலம் தொட்டு மேம்பட்டு வரும் குடியினர் என மூவேந்தரைக் குறிப்பிடுவதும் இங்குக் கவனிக்கத் தக்கது.

எனவே, உதியஞ் சேரலாத மன்னனுக்கு முன்னால், சேர நாட்டை ஆட்சி செய்த அரசர் யார்? என்னும் தெளிவு எதுவும் தெரியவில்லை என்பதற்கு இதுவும் ஒரு சான்றாகிறது.

## *07 - உதியஞ் சேரலாதன்*

உதியன் என்பது இயற்பெயர். ஆதன் என்பது மரபு வழிப் பெயர். பெருஞ்சோறு என்னும் அடைமொழி எவ்வாறு இணைந்தது? பாரதப் போர் முடிந்தவுடன், இறந்துபடாமல் எஞ்சி இருந்தவர்களை வைத்துக் கொண்டு, போரில் வீர மரணம் எய்தியவர்களுக்காகப் பிண்டம் போட பெருஞ்சோற்று விழா நடத்தினான் உதியன். இது பிண்டோதகக் கிரியை எனப்படும்.

இந்த நீத்தார் கடன் கழித்தல் நிகழ்ச்சியின் நினைவாகத்தான், பெருஞ்சோற்று உதியஞ் சேரலாதன் எனப் பெருமையுடன் பேசப்படுகின்றான். உதியன் தலைநகர் வஞ்சி.

*வரலாற்று* நிகழ்வுகளுக்கு முதன்முதல் தெரிய வருபவன் உதியன். எனவே, சேர வேந்தரும், அவர்தம் கிளைக் குடியினரும் உதியன் மரபிலே வந்தவர்கள் எனக் கூறப்படுகிறார்கள்.

## *08 - சேர அரசியரின் தவக்கோலம்*

சேர மன்னர்களின் *மனைவியருள் சிலர், தம் கணவன்மார்* மறைவுக்குப்பின் தங்கள் இறுதிக் காலத்தில், தம்

கணவன்மார்களுக்காகத் தவக்கோலம் பூண்ட செய்தி சேர மன்னர் மரபில் வந்தவர்களாலேயே சொல்லப்படுகிறது.

தவக்கோலம் கொண்ட அவர்கள் காலப்போக்கில் தெய்வமாகப் போற்றப்படுகின்றனர். அவர்களை நினைவில் வைத்துக் கொள்ளுதற் பொருட்டு, பிற்காலத்தில் அம்மரபில் தோன்றியவர்கள் அவர்களுக்குச் சிலை எடுத்துப் போற்றி, கோயில் கட்டி வழிபடத் தொடங்கினர்.

அவ்வாறு முதன்முதலாகப் போற்றப்பட்டவள் முன்னு தித்த நங்கை.

## *09 - உதியத்து நங்கை*

வரலாற்றில் தெரிகின்ற முதல் சேர மன்னன் உதியன் மரபில் தோன்றிய பெருமைக்காக, அம்மன்னனின் பெயரால் உதியத்து நங்கை என அழைக்கப்படுகிறாள். அதாவது உதியன் மரபிலே வந்தவள் என்பது பொருள்.

இதற்குச் சான்றாக,

செங்கேணி சாத்தன் நாலாயிரவன் கரிகால் சோழச் செங்கேணி நாடாழ்வான் என்னும் பெயர் கி.பி. 1069 இல் வெட்டப்பட்ட கல்வெட்டு ஒன்றில் வருகிறது. வடார்க்காடு மாவட்டத்தில் வாழ்ந்த குறுநில மன்னனாகிய செங்கேணி நாடாழ்வான், தன் மரபின் முன்னோனாகிய சோழப் பேரரசன் கரிகால் சோழனின் பெயரைப் பெருமையுடன் தனது பெயருடன் இணைத்துள்ளதைக் கல்வெட்டு ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

புகழ்பெற்ற மரபின் முதல்வன் உதியஞ்சேரன் பெயரை இணைத்துக் கொண்டதைப் போல, இங்கே கரிகால்சோழன் பெயரை இணைத்துக் கொண்டிருப்பதை அறியலாம்.

உதியஞ்சேரி, உதியம் பேரூர் என ஊர்ப்பெயர்கள் இன்னும் கேரளாவில் உள்ளன.

## 10- முன்

முன் என்பதற்குப் பழைமையான எனவும் பொருள் உண்டு. திண்டிவனம் அருகில் முன்னூர் என்னும் ஊர் உள்ளது. பழைமையான ஊர் முன்னூர். நமக்கு முன் வாழ்ந்தவர்களை முன்னோர் என்கின்றோம். குறும்பர் முன் குறும்பர் எனப்படுகிறார்.

பழங்காலத்திலேயே - முற்காலத்திலேயே - அதாவது, பிற்காலத்தில் தவம் மேற்கொண்ட சேர அரச நங்கையருக்கு முன்பே என்னும் பொருளில், முன் என்பதை இணைத்தும், முன்னோன் உதியன் மரபைச் சேர்த்தும் முன் உதியத்து நங்கை எனப் போற்றப்படுகிறாள். இவ்வரசப் பெருமாட்டியின் இயற்பெயர் தெரிவதற்கு எவ்விதச் சான்றும் இல்லை.

## 11-முன் உதியத்து நங்கை

முன் உதியத்து நங்கை என்னும் பெயர் அமைந்தமைக்கு இன்னும் உறுதியான சான்றுகளும் உள்ளன.

*அ. அகச் சான்று* தற்போது திருவனந்தபுரம் அரண்மனையில் வீற்றிருக்கும் திருவிதாங்கூர் மன்னர் வரையிலும் உதியஞ் சேரலாதன் மரபினரே

அம்மரபில் தோன்றிய ஸ்ரீ சித்திரைத் திருநாள் மன்னர் இராமவர்மாவின் சகோதரி மகள் - மன்னரின் மருமகள் - அரசகுமாரி ஸ்ரீ அசுவதித் திருநாள் கௌரிலட்சுமி பாய் தாம் எழுதிய ஆங்கில நூலில் முன் உதியத்து நங்கை என்றே இந்த முன்னுதித்த நங்கை யைக் குறிப்பிடுகின்றார்.

இவ்வாறு குறிப்பிடுவதிலிருந்து, தம் மரபின் முதல் முன்னோன் பெருஞ்சோற்று உதியஞ்சேரலாத் மன்னனை ஸ்ரீ அசுவதித் திருநாள் கௌரி லட்சுமி பாய் மறவாது போற்றுவது தெரிகிறது.

மேலும், தாமும் அம்மரபில் தோன்றியவரே என்பதை வலியுறுத்த இவ்வாறு கூறுகின்றார் என்பதும் தெரிகிறது.

அம்மரபில் தோன்றியவரே வாக்கு மூலம் கூறும்போது வேறு சான்று வேண்டுமா?

கேரள நாடோடிகள் முன்னூட்டி நங்கா என்பர் எனவும் குறிப்பிடுகின்றார். முன்னுதியத்து என்னும் தொடர் நாடோடிகள் வழக்கில் முன்னூட்டி என்றாயிற்று.

*ஆ. புறச்சான்று*

திருவனந்தபுரம் அரண்மனையில் ஆண்டுதோறும் நவராத்திரி விழாக் கொண்டாடப்பட்டு வருகிறது. இவ்விழாவுக்குப் பத்மனாபபுரம் அரண்மனையிலிருந்து சரசுவதி சிலையும், வேளிர் மலையிலிருந்து முருகப் பெருமான் திருமேனியும் ஊர்வலமாக எடுத்து வரப்படுகின்றன.

இத்திருமேனிகளோடு, சுசீந்தரத்திலிருந்து முன்னுதியத்து நங்கை திருமேனியும் எடுத்து வரப்படுகிறது. பத்மனாபபுரம் அரண்மனையிலிருந்து யானை முன்னால் செல்ல, பெருந்திருவிழா ஊர்வலமாக இவற்றைத் திருவனந்தபுரம் அரண்மனைக்கு எடுத்துச் செல்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் ஒரு முதன்மைச் செய்தியும் உள்ளது. உதியஞ்சேரலாத மன்னன் மரபில் வந்தவர்தாம் முன்னுதியத்து நங்கை என்பதை விழாவில் பங்கேற்புச் செய்தி அரணாக இருந்து உறுதிப்படுத்துகிறது.

தமக்கு உரிமை உடைய அரண்மனையில் நடைபெறும் விழாவுக்கு அழைக்கப்பட்டு உரிமையுடன் கலந்து கொள்கிறார் முன் உதியத்து நங்கை.

இச்சான்று, இன்றைய திருவிதாங்கூர் மன்னர், பழம்பெருமை வாய்ந்த சேர மன்னர்களின் வழித் தோன்றல்களே

என்பதை உறுதி செய்கின்றது.

சேர மன்னர்களின் மரபில் தோன்றிய ராணி கௌரிலட்சுமிபாய், முன் உதியத்து நங்கை என ஏற்கெனவே குறிப்பிடுகின்றார்.

*இ.* அடுத்து ஓர் ஐயம் எழுகிறது. தவம் இயற்றிய சேர அரசர் குலப் பெண்மணிதான் தெய்வமாகப் போற்றப்படுகிறாள் என்பதற்கு ஏதாவது ஒரு வகையில் சான்று வேண்டும் அல்லவா? அதாவது, சேரர் மரபு கடவுளோடு தொடர்புடையது எனச் சொல்வதற்கு ஆதாரம் ஏதாவது உள்ளதா என்னும் வினா எழுகிறது.

(1) இவரை (சேரரை) வானவர் என்ற பெயரால் பண்டை நூல்களும், நிகண்டுகளும் குறிப்பிடுகின்றன. இதனால், இவ்வமிசம் தெய்வ சம்பந்தம் பெற்றது என்பது மட்டில் தெளிவாகும்

மு. இராகவையங்கார் – சேரன் செங்குட்டுவன்

*(2) குடக்கோ இளஞ்சேரல் இரும்பொறை அற வேள்வி* ஒன்று செய்தான்; பலநாடுகளிலிருந்தும் சான்றோர் பலர் *வந்திருந்தனர். அவ்வேள்வியை அவனுடைய அமைச்சருள்* ஒருவனான மையூர்கிழான் என்பான் முன்னின்று நடத்தினான்.

வேள்வி ஆசானாகிய புரோகிதன் முறையே சடங்குகளைச் செய்து வருகையில் தவறொன்றைச் செய்து விடடான். மையூர் கிழான் அதனை எடுத்துக் காட்டினான். அது குறித்துச் சொற்போரும் ஆராய்ச்சியும் நடந்தன. மையூர் கிழான் கூறுவதே சிறந்ததாக முடிவாயினமையின் அவனையே வேள்வி ஆசானாக இருந்து வேள்வியை முடிக்குமாறு வேந்தன் ஆணையிட்டான்.

பதிற்றுப் பத்து பதிகம் ஏழில் கூறப்படும் வரலாற்று நிகழ்ச்சியை இவ்விளக்கம் உறுதிப்படுத்துகிறது.

(3) திருவட்டாறு ஆதிகேசவப் பெருமாள் கோயில் கருவறைக்கு எதிரே ஒற்றைக்கல் மண்டபம் இருக்கிறது. தென்மேற்குத் திருமுற்றத்தில் ஒரு மேடையில் நான்கு வேத மூர்த்திகள் உள்ளனர். இந்தஇடத்தில் பெரிய யாகங்கள் செய்யப்படும். எதிரிடையான கருத்தைத் தவறு எனக் காட்டி,

திருவாங்கூர் யாக பூமியாக விளங்கியது என்பதற்கு இது ஒரு சான்றாகும்.

கால மாற்றத்தில் நான்கு மறைகளும் வேத மூர்த்திகளாக உருவகம் செய்யப்பட்டுள்ளன. வேள்வியில் செய்யப்படும் சடங்கில் தவறு நேருமாயின் சுட்டிக்காட்டப்படும் என்னும் செய்தி இச் சான்றால் தெரிய வருகிறது.

பதிற்றுப் பத்தில் கூறப்படும் செய்தியை இக்கோயில் நிகழ்வு மேலும் உறுதிப்படுத்துகின்றது.

எனவே, சேர மன்னர்களுக்கும், கடவுளர்க்கும், திருக்கோயில்களுக்கும் உள்ள தொடர்பு இச்சான்றுகளால் தெரிய வருகிறது.

இச்சான்றுகளின் வழி, தெய்வத்தோடு தொடர்புடைய சேர அரசர் குலப் பெண்மணி, முன்னுதியத்து நங்கை எனத் தெய்வமாகக் காலப்போக்கில் போற்றி வணங்கப்பட்டாள் என்பதை உய்த்துணரலாம்.

தென்குமரி நாட்டுப் பகுதி சேர மன்னரின் ஆட்சிக்கு உட்பட்ட பகுதி, ஆகவே, ஆங்கு அந் நங்கைக்குக் கோயிலும் கட்டப்பட்டது. தமது ஆட்சி எல்லையை உறுதிப்படுத்துவதற்குக் கோயிலும் ஓர் ஆதாரமாகச் சேர்க்கப் பயன்பட்டது.

**11.** மௌனபலி – சிறப்புப் பூசை

மலையாள நாட்டுச் சைவப் பிராமணர்களைக் கோயில் திருப்பணிக்கு நியமித்தார்கள். இவர்கள் கேரளா வட்டப் பள்ளி ஸ்தானிகர்கள்.

சுசீந்தரம் கோயிலில் ஏற்றிய திருவிழாக் கொடியைக் கீழே இறக்குவதற்கு முன்னால் வட்டப் பள்ளி மடத்துச் சார்பில், முன்னுதியத்து நங்கைக் கோயிலில் மௌனபலி சிறப்புப் பூசை இன்றும் நடத்தப்படுகிறது.

சுசீந்தரம் திருக்கோயிலில் திருவிழாவெல்லாம் நிறைவெய்திய பிறகு, ஏற்றிய கொடியை இறக்குவதற்கு,

அக்கோயிலுக்கு உரிமை உடைய சேர அரச மரபில் தோன்றி, தெய்வமாக இலங்கும் அருள் நங்கையிடம் அனுமதி கேட்பதற்காகச் செய்யப்படும் மௌன பலி பூசையாக இருக்கலாம்.

இப்பண்பாட்டின் தொடர்ச்சியாக இப்போதும் இக்கொடியிறக்க நிகழ்ச்சி என வேறு ஒரு வடிவில் தேசியக் கொடி இறக்கும்போது நடைபெற்று வருகிறது.

## *12. நிறைவுரை*

முன்னுதியத்து நங்கை, முன்னுதித்த நங்கை ஆனது எப்படி ?

வேலூரின் பகுதியான சாத்துவச் சேரி, சத்துவாச்சாரி ஆனதுபோல, சேரநாட்டுக் கல்லடி மலையடி ஆதிசங்கரர்க்குப் பிறகு புனிதம் கருதி காலடி ஆனது போல,

பொருளும், வரலாற்று உண்மையும் அறியாத நிலையில் முன்னுதியத்து நங்கை, முன்னுதித்த நங்கை ஆயிற்று. அதற்குப் புராணங்களும் புனைந்துரைக்கப்பட்டன.

## *துணை நூல்கள்*


1. பதிற்றுப் பத்து
2. சேரர் வரலாறு – அவ்வை சு. துரைசாமிப் பிள்ளை
3. சேரன் செங்குட்டுவன் – மு. இராகவையங்கார்
4. வரம் தரும் கேரளக் கோயில்கள் ஏழு – அசுவதித் திருநாள் கௌரிலட்சுமி பாய்.



**ஆதி. பாலசுந்தரன்,**
தனிநிலை ஆய்வர்.
ஏ.எஸ்.கே. வளாகம்,
20–விக்டோரியா அச்சகச்சாலை
நாகர்கோயில் 629 001.

# மாலவன் பற்றிய தேசியக் கருத்தரங்கம்

திருமலை திருப்பதி கோயில் சார்பாக நாலாயிரத்திவ்விய பிரபந்தம் என்னும் பொருளில் 3 நாட்கள் தேசியக் கருத்தரங்கம் மதுரை தமிழ்ச்சங்கம் செந்தமிழ்க் கல்லூரியில் நடைபெற்றது. மதுரை காமராசர் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பி. மருதமுத்து சிறப்புரையாற்றினார். செந்தமிழ்க் கல்லூரிப் பேராசிரியர்கள் சங்க இலக்கியம் குறித்து எழுதியுள்ள சங்க இலக்கியச் சால்பு என்னும் நூல் துணைவேந்தர் வெளியிட அதைப் பெற்று கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் திரு. உதயபாஸ்கரன் உரையாற்றினார். செந்தமிழக் கல்லூரி செயலாளர் திரு. இரா.குருசாமி இவ்விழாவிற்குத் தலைமையேற்றார். இவ்விழாவில் உலகத் திருக்குறள் பேரவைச் செயலாளர் திரு.ந. மணிமொழியன் கீதையும் குறளும் குறித்து உரையாற்றினார். மதுரைக் கம்பன் கழகப் புரவலர் திரு. சங்கர சீத்தாராமன் வாழ்த்துரை வழங்கினார். கல்லூரி முதல்வர் முனைவர்.க.சின்னப்பா அனைவரையும் வரவேற்றார். கல்லூரிப் பேராசிரியர்கள் செந்தமிழ் ஆசிரியர் இரா. சதாசிவம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

முதல் அமர்விற்கு பேராசிரியர் மணிவேல் தலைமை ஏற்றார். பேராசிரியர்கள் ம.பெ. சீனிவாசன், குற்றாலம் பராசக்தி கல்லூரிப் பேராசிரியை ஜெயபாரதி, மதுரை காமராசர் பல்கலைக்கழகத் தொலைநிலைக் கல்வி கூடுதல் தேர்வாணையர் ம. திருமலை, முதல்வர்.க.சின்னப்பா, தெலுங்குத் துறைப்பேராசிரியர் ஜெயப்பிரகாஷ் ஆகியோர் ஆழ்வார்கள் காட்டும் கண்ணன் என்னும் பொருளில் கட்டுரை படித்தனர்.

இரண்டாம் அமர்வு 14.9.2006 காலை 10 மணிக்குத் தொடங்கியது. பேராசிரியர் பத்மா சீனிவாசன் தலைமை

தாங்கினார். தூத்துக்குடி மகாலட்சுமி கல்லூரி முதல்வர் திருமதி. இளம்பிறைமணிமாறன், முனைவர் நிர்மலா மோகன், முனைவர் பழனியம்மாள், முனைவர் மு. மீனா ஆகியோர் கட்டுரைகள் வழங்கினர்.

மூன்றாம் அமர்வு 14.9.2006 மாலை 2 மணிக்குத் தொடங்கியது. மதுரை காமராசர் பல்கலைக்கழக ஒப்பிலக்கியத் துறைத்தலைவர் பேராசிரியர் இரா. மோகன் தலைமையேற்றார். சாகித்திய அகாதமியின் தமிழ்மொழி ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் இரா. பாலசந்திரன், பொள்ளாச்சி என்.ஜி.எம். கல்லூரிப் பேராசிரியர் முனைவர் அமுதன். மதுரை காமராசர் பல்கலைக்கழக் ஆட்சிக்குழு உறுப்பினர் பேராசிரியர் எஸ். வெங்கட்ராமன், திருவேடகம் விவேகானந்தா கல்லூரி சமஸ்கிருதத் துறைப் பேராசிரியர் அனந்தராமன் ஆகியோர் கட்டுரைகள் வழங்கினர்.

நான்காம் அமர்வு 15.9.2006 காலை 10 மணிக்குத் தொடங்கியது. வரலாற்றுத்துறைப் பேராசிரியர் வெங்கட்ராமன் தலைமையேற்றார். பராசக்தி கல்லூரி தெலுங்குத்துறைப் பேராசிரியர் கங்கா பவானி. ஸ்ரீவில்லிபுத்தூர் வி.பி.எம்.எம். கல்லூரித் தமிழ்த்துறைப் பேராசிரியர் ஜி. சங்கரம்மாள், திருப்பதி எஸ்வி. ஓரியண்டல் கல்லூரிப் பேராசிரியர் உ.வே.பி.ஆர். அரங்கராசன் ஆகியோர் கட்டுரைகள் வழங்கினர்.

15.9.2006 மாலை 2 மணிக்கு நிறைவு விழா நடைபெற்றது. கல்லூரிச் செயலர் திரு. குருசாமி தலைமையில் திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத் தெலுங்குத் துறைப் பேராசிரியர் முனைவர் ஜே. முனிரத்னம் நிறைவுரையாற்றினார். கல்லூரி முதல்வர் க. சின்னப்பா அனைவரையும் வரவேற்றார். டாக்டர். நிர்மலா மோகன் நன்றியுரையாற்றினார். திருமதி நிர்மலா மோகன் பங்களிப்பு குறிப்பிடத்தக்கது.

மூன்று நாட்களும் கண்ணன் குறித்த இசைக்கச்சேரி நிகழ்த்தப் பெற்றது.

பதிப்பாசிரியர்

**பேராசிரியர். திரு. இரா. சதாசிவம்**

## ஆசிரியர் குழு


முனைவர். திரு. தமிழண்ணல்

பெரும்புலவர் திரு. இரா. இளங்குமரன்

டாக்டர் திரு. ந. சேதுராமன்

முனைவர். திரு. சுப. அண்ணாமலை

முனைவர். திரு. ம.ரா.போ. குருசாமி

முனைவர். திரு. அ.அ.மணவாளன்

முனைவர் கதிர் மகாதேவன்

முனைவர் நா. பாலுசாமி

முனைவர் பெ. சுயம்பு

முனைவர். திரு. அ. தட்சிணாமூர்த்தி

இராசா. திரு. முருகதாஸ் தீர்த்தபதி

முனைவர். திரு. செ. கந்தசாமி

முனைவர். திரு. க. சின்னப்பா



பதிப்பாசிரியர், இரா.சதாசிவம், 2/404, மருதுபாண்டியர் தெரு, வட்டாட்சியர் நகர், மதுரை-20. ✆ 2532879.

ஆசை அச்சகம், மதுரை. ✆ 26 222 50, 98434 - 32484

# மதுரைத் தமிழ்ச்சங்க

# நூற்றாண்டு மலருக்கு

**தமிழ், தமிழ்ப் பண்பாடு,**

**தமிழ்ச் சமுதாயம், தமிழ்ச்சங்கம்**

மற்றும்

**வள்ளல் பாண்டித்துரைத் தேவர்**

குறித்த கட்டுரைகள் அனுப்ப


தொடர்பு முகவரி

பதிப்பாசிரியர்
செந்தமிழ்
மதுரைத் தமிழ்ச்சங்கம்,
மதுரை – 625 001.
போன் : (0452)-2532879

முதல்வர்
செந்தமிழ்க் கல்லூரி,
மதுரை – 625 001.
போன் : (0452)-2343707



அனுப்புநர்,
செயலாளர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்,
மதுரை–1.

From,
Secretary,
Madurai Tamilsangam,
Madurai - 1.
TAMILNADU, S. INDIA


பெறுநர் / To,